# "கட்டிளமைப்பருவ மாணவர்களுக்கான பாலியற் கல்வியின் முக்கியத்துவமும், நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்"

**Mr. Mariyadas Shandru [B.Ed. (Hons), M.Ed.]**
Lecturer in Education and Childcare, Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
chandrumariyadas@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம்**

இன்று பாடசாலைக் கல்வியானது வாழ்கைக்கு வழிகாட்டலை வழங்கக்கூடிய ஒரு கல்வியாகக் காணப்படவேண்டும். பாடசாலையில் பாடங்களும், மற்றும் ஒழுக்கம் சார்ந்த வழிகாட்டல்களும் மாணவர்களுடைய வாழ்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அந்தவகையில் தற்போது "கட்டிளமைப்பருவ மாணவர்களுக்கான பாலியற் கல்வியின் முக்கியத்துவமும், நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்" என்ற தலைப்பில் ஏறாவூர்ப்பற்று பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளை மையமாக கொண்டு இந்த ஆய்வானது மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வுக்கென மட்டக்களப்புக் கல்வி வலயத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள IAB, IC, வகை - II பாடசாலைகள் 07 உம் மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 207 கட்டிளமைப்பருவ மாணவர் அவர்களின் குடும்பமும் 62 ஆசிரியர்களும் இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து அடிப்படையில் பாடசாலை மாணவர், ஆசிரியர், பெற்றோர்களிடமும் நேர்காணல் முறையில் அதிபர் மற்றும் சிறுவர் நன்னடத்ததைப் பிரிவினரிடமும் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்விற்குட்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. தற்போது பாலியல் சார்ந்து துஷ்பிரயோகங்கள், கருக்கலைப்புக்கள், இளவயது திருமணங்கள், பாரிய நோய்த்தொற்றுக்கள் போன்ற பல பிரச்சினைகள் ஏற்பட பாலியல் ரீதியான முறையான வழிகாட்டல் இன்மையே என்று தரவுகளின் அடிப்படையில் தெளிவாக கண்டுணரப்பட்டது. மாணவர்களிற்கு பாலியல் ரீதியான பிரச்சினைக்கு ஏற்ப ஆசிரியரும், பாடசாலையும், அரசாங்கமும் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும். பாடசாலையில் முறையான வழிகாட்டல் ஆலோசகரை நியமித்தல், பாலியல் கல்வியை வழிப்படுத்த பாலியல் ரீதியான ஆலோசகர்களை நிர்ணயித்தல், குறிப்பிட்ட பாடக்கற்றலில் காணப்படும் விடயங்களை தெளிவுற கற்பித்தல் தனித்தன்மையாக பாடத்திட்டத்தை அமுல்படுத்தல், மாணவர்கள் மட்டுமன்றி பாடசாலை வெளிச்சூழலில் உள்ளவர்களிற்கும் கருத்தரங்குகளை ஏற்படுத்தல் போன்ற பல செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் போது பாடசாலைக்கும், சமூகத்திற்கும் இது தொடர்பான முக்கியத்துவம் உணர்த்தப்படும்.

**Key words** : கட்டளைமைப்பருவம், பாலியற்கல்வி, ஆசிரியர்களின் கற்பித்தல் சவால்கள்

## அறிமுகம்

எதிர்கால சமூகங்களை நல்வழிப்படுத்துவதில் அந்தந்தச் சூழலில் உள்ள பாடசாலைகள் பெரும் பங்காற்றுகின்றன. ஆனால் இவ்வாறுபட்ட பாடசாலைகள் மாணவர்களின் கற்றல் அடைவுகளில் மட்டும்தான் அதிக அக்கறை செலுத்துகின்றன. கட்டிளமைப்பருவ மாணவர்கள் ஒவ்வொருவரும் தனது எதிர்கால வாழ்வினைத் தீர்மானிக்கும் முக்கியமான பருவத்தில் காணப்படுகின்றனர். அவர்களின் திடமான வளர்ச்சிக்கு சரியான வழிகாட்டற்கல்வி அவசியமானதாகும். பாடசாலைகள் மீது அண்மைக் காலங்களில் கூறப்பட்டு வருகின்ற ஒரு பிரதான குறைபாடு என்னவெனில் பாடசாலைகள் தமது உயர்மட்டக் குறிக்கோளைக் கைவிட்டு ஏனைய பாடசாலைகளைவிட தமது பாடசாலை முன்னணியில் திகழ வேண்டும் என்பதற்காக மாணவர்களை பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் பணிகளிலேயே கூடிய கவனயீர்ப்பு செலுத்துகின்றனர். ஆயினும் இது தவிர அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான பாலியல் அடித்தளத்தினை உறுதியாக்குவதில்

அதிக அக்கறை காட்டுவதில்லை. திறமை இருந்தும் தமது வாழ்க்கையை முறையான பாலியற்கல்வி மூலமான வழிகாட்டல்கள் இன்மையால் வீணாக்கிய மாணவர்கள் இன்று இவ்வாய்வுக்கான பின்னணிகளாகக் காணப்படுகின்றனர்.

**ஆய்வுப்பின்னணி**

"கட்டிளமைப்பருவ மாணவர்களிடத்து பாலியற் கல்வி வழிகாட்டப்படாமை" என்ற பிரச்சினைக்கு பின்னணியாக முதலில் குறிப்பிடுவது பாலியற்கல்வி முறையாக வழிகாட்டப்படுவதில் அலட்சியப்போக்குகள் பாடசாலை மட்டங்களில் காணப்படுகின்றமை. அதாவது இத்தகைய பிரச்சினை தோன்ற பல்வேறு காரணிகள் பின்னணியாக உள்ளன. அந்த வகையில் பாலியற்கல்வி என்பது கலைத்திட்டத்தில் பிரத்தியேகமாக உள்வாங்கப்படாமையும் காரணியாகும். மேற்கத்தேய நாடுகளில் இதற்கான கலைத்திட்டம் தற்போது அமுலில் காணப்பட்டாலும் எமது நாட்டில் அவை பிரத்தியேக பாடமாக இல்லாமல் சிறு பிரிவுகளாக உள்ளமையும் பின்னணிக் காரணிகளாக உள்ளன. கட்டிளமைப்பருவ மாணவர்களை வளர்ந்தவர்களாக நோக்குவதால் ஆலோசனை வழங்குவதில் பெரிதளவு ஈடுபாடு காட்டாமையும் காரணமாகும் ஆசிரியர்கள் இக்கல்வியை முன்னெடுத்து செல்வதில் உள்ள இடர்பாடுகளும் பின்னணியாக உள்ளன. கலவன் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாலியல் கல்வியை பற்றி கற்பிக்கும் வேளை ஆண், பெண் மாணவர்கள் கலந்து காணப்படுவதால் அவற்றை உள்வாங்குவதில் பிரச்சினை காணப்படுவதால் மேலோட்டமாக வாசித்து விட்டு செல்வது பிரச்சினைக்குரிய பின்புலமாகக் காணப்படுகின்றது. மாணவர், ஆசிரியர்களுக்கான உறவு எதிர்ப்பாலாக அமைவதால் பாலியல் சார் கற்றலில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான பிரச்சினைக்கான பின்னணியாக உள்ளது.

**ஆய்வுப் பிரச்சினைகள்**

இன்றைய நிலைப்பாட்டில் பாலியல் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படுவது மிகக் குறைவானதாகவே பாடசாலை மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வீடுகளில் பெற்றோர்களின் உளவியல் ரீதியான கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக முடிவுகளை எடுக்க விரும்பும் பிள்ளைகள் தமது சகபாடிகளின் கணிப்பினையே சிறப்பானதாகக் கொள்ளும் மனநிலையில் உள்ளனர். இதனால் மாணவர்கள் தன்னிலை அறியாமல் தீமையான காரியங்களில் சிக்கிக்கொள்கின்றனர். குறிப்பாக கட்டடிளமைப் பருவத்திலேயே சுய முடிவுகள் எடுக்கும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் ஆனால் பாலியல் சார் மாற்றங்களையும், நடைமுறைகளையும் சரியாகப் புரிந்துகொள்ளாமல் பாதகமான நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இதனால் பதின் மூன்று வயது தொடக்கம் பாடசாலை முடியும் காலம் வரையில் இத்தகு பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை சீராக நடாத்திச் செல்வதனை குறைத்துக் கொள்கின்றனர். வீடுகளில் பெற்றோர்களிடம் இருந்தோ, சகோதரர்களிடமிருந்தோ அல்லது பாடசாலைகளில் ஆசிரியர்களிடம் இருந்தோ பாலியல் சார் விளக்கங்களை நேரடியாகப் பெறுவதற்கு மாணவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். வழிகாட்டல் ஆலோசனை தொடர்பான முறையான நீண்ட கால பயிற்சிகள் எடுக்கவில்லை. போதிய விளக்கமும், தெளிவுமில்லாமல் மாணவர்கள் பாலியல் குற்றங்களில் ஈடுபடுவதும், கெட்ட நடத்தைக்கு தூண்டப்படுவதுமான சூழ்நிலை கட்டிளமைப்பருவ மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு பெரும் தடையாகக் காணப்படுகின்றன. விளக்கமில்லாமல் பாலியல் சார் தவறுகளில் ஈடுபடுகின்ற மாணவர்கள் மீண்டும் வகுப்பறைக் கற்றலில் ஈடுபடும்போது தாழ்வு மனப்பான்மை காரணமாக கற்றலில் ஆர்வங்காட்டாத நிலைகள் போன்றனவும் காணப்படுகின்றன. பெரும்பாலும் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாலியற்கல்வியை, வழிகாட்டல்களை நடத்தாமையே அதிகமான மாணவர்களின் மனவெழுச்சிகளை சீர்குலைக்கின்றது. வீடுகளில் பெற்றோர்கள் காட்டுகின்ற தயக்கத்தினை பாடசாலைகளின் ஆசியர்களும் காட்டுகின்றபோது இளம்வயதுடைய மாணவர்கள் இன்று தாமாகவே தேடிக்கொள்ள முயலுகின்றனர். இச்செயற்பாடுகள் பாதமான வழிகளைக்கூட திறந்துவிடுகின்றது. பாலியல் சார் கல்வி வழிகாட்டல்களை வழங்கும் ஆசிரியர்களுக்கு பாலியற்கல்வி தொடர்பான பூரண விளக்கமின்மை கவலைக்குரிய விடயங்களாகின்றது.

**ஆய்வுக்கூற்று**

கட்டிளமைப்பருவ மாணவர்களுக்கு முறையான பாலியற்கல்வி வடிவமைக்கப்படாமையும் அதனை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் காட்டும் தயக்கமும், அசமந்தப்போக்குகளும் காரணமாக மாணவர்கள் தாமாகவே தவறுதலான பாலியல் ரீதியான பாதகமான நடத்தைகளில் ஈடுபட்டுக்கொண்டு கற்றல் நடவடிக்கைகளில் திடீர் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றனர்.

**ஆய்விற்கான நோக்கங்கள் (research objectives)**

**பொது நோக்கம்**

பாலியல்சார் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை முறியடிப்பதற்கான நுட்பங்களை ஆசிரியர்கள் மத்தியில் உறுதியான நிலைக்குக் கொண்டுவருதோடு பாலியற் கல்வியின் முக்கியத்துவத்தினை பாடசாலைக்கும், சமூகத்திற்கும் உணர்த்துதல்.

**சிறப்பு நோக்கம்**

1. மட்டக்களப்பு கல்வி வலய ஏறாவூர்ப்பற்றுப் பாடசாலைகளில் பாலியற் கல்வி வழிகாட்டல்கள் வழங்கப்படும் முறைகளைப்பற்றி ஆராய்தல்.
2. பாலியற்கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் வழங்குபவர்களின் தரம், தகுதி என்பவற்றின் முக்கியத்துவத்தினையும் இனங்கண்டறிதல்.
3. பாலியற்கல்வி தொடர்பான வழிகாட்டல்களின்போது ஆசிரியர்களுக்கு உண்டாகும் சவால்களை மதிப்பிடல்.
4. முறையான பாலியல் சார் வழிகாட்டல் தொடர்பாகவும் கிடைக்காமையால் கற்றல் விருத்தியில் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் பாடசாலைக்கும், சமுகத்திற்கும் எடுத்துக்காட்டல்.

**இலக்கியமீளாய்வு**

பாலியற்கல்வி கற்பதற்கு மாணவர்கள் அதிக ஆர்வங்காட்டுகின்றனர், ஆசிரியர்களும் பெற்றோர்களும் இதற்கு அதிக ஆர்வங்காட்டவேண்டும். குடும்ப வாழ்க்கை முறைகள் தொடர்பாக கல்வி வழங்கப்பட வேண்டும், 10 – 25 இடைப்பட்ட மாணவர்களுக்கு இக்கல்வி மிகக்கட்டாயமாக வழங்கப்பட வேண்டும், பாலியற்கல்வி வழங்படுவதனால் ஆளுமைவிருத்தி ஏற்படுகின்றது எனும் இவ்வாய்வின் முடிவுகளுக்கிணங்க கட்டிளமைப்பருவத்தில் பாலியற்கல்வியின் அவசியத்தினை உணர்த்துகின்றது. அத்தோடு பாலியற்கல்வி மாணவர்களுக்கான ஆளுமையை வெளிக்காட்டுவதால் உரிய முடிவுகளை மாணவர்கள் எடுக்கவும் கல்விப்பாதையில் சீராக முன்னெடுக்கவும் பாலியற்கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதனை நாம் உணரலாம் (Niharika Tripathi ,T. V. Sekher ,2013).

5.

HIV தொடர்பான விழிப்புணர்வுகள் தரம் 6 மற்றும் 7 மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும், இதற்கான கலைத்திட்டங்கள் உருவாக்கப்படும்போது பூரணமான HIV தொடர்பான உள்ளடக்க விளக்கங்கள் வகை குறிக்கப்பட வேண்டும், குறிப்பாக கட்டிளமைப்பருவத்திற்கான முன் கட்டத்தின் ஆரம்பப்பகுதியில் இக்கல்வியின் தேவை உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவுகளுக்கிணங்க பாலியற்கல்வி ஊடாக பாலியல் சார் நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்படுவதனால் மாணவர்களுக்கு முன்னெச்சரிக்கைகள் வழங்கமுடியும் (Cornelissen, Shirle, 2012) ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான பாலியற் கல்வியின் தேவையும், முக்கியத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது, ஒழுக்கங்களின் ஊடாகவும், சமயப் போதனைகளின் ஊடாகவும் இக்கல்வி வழங்கப்பட வேண்டும், சிறுபிள்ளைகளுக்கான பாலியற்கல்வி பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டாலும் அவை மீண்டும் பெற்றோர்கள் மூலம் விரிவாக்கப்பட வேண்டும் அப்போது தான் பாலியற் கல்வியின் விளக்கம் சிறுவர்களுக்கு ஊட்டமளிக்கும். எனும் இவ்வாய்வின் முடிவுகளுக்கிணங்க மாணவர்களுக்கான பாலியற்கல்வியின் முக்கியத்துவத்தினை இனங்காண்பதோடு வழங்கப்படும் முறைகளையும் உய்த்துணரக்கூடியதாகவுள்ளது (Magreth Bilinga &N.kuba Mabula, 2014).

**ஆய்வு முறையியில்**

இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்படவுள்ளன. இது அதிபர், ஆசிரியர்கள், தரம் 8 தொடக்கம் தரம் 13 வரையான கட்டிளமைப்பருவ மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியோரின் தனிப்பட்ட விபரங்களைக் கொண்டமைவதால் இம் முறை பயன்படுத்தப்படவுள்ளது. இவ்வாய்வின் தரவு வடிவங்களைத் தீர்மானித்து பின்னர் தரவுகளைச் சேகரித்து அத்தரவுகளைப் பகுப்பாக்கம் செய்து Micro soft Excel-2013 மூலம் கிடைச் சலாகை வரைபுகளாகக் குறித்துக் காட்டப்படவுள்ளதால் இவ் ஆய்வானது அளவை நிலை ஆய்வாகக் காணப்படுகின்றது.

**தரவுகளை சேகரித்தல்**

அட்டவணை 3.2 மட்டக்களப்பு கல்வி வலயப் பாடசாலைகள் பற்றிய விபரம்

| வலயப் பிரிவுகள் | பாடசாலை வகை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | I AB | IC | வகை II | வகை III | |
| மண்முனை வடக்கு | 08 | 04 | 16 | 11 | 39 |
| ஏறாவூர்ப் பற்று | 01 | 03 | 03 | 02 | 09 |
| மண்முனைப் பற்று | 01 | 03 | 04 | 08 | 16 |

(வலயக்கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு - 2016)

மட்டக்களப்பு கல்வி வலய ஏறாவூர்ப்பற்று 1AB பாடசாலை ஒன்றும் 1C வகைப் பாடசாலைகள் மூன்றும் வகை-III பாடசாலைகள் 03 உம் மொத்தமாக 07 பாடசாலைகள் ஆய்விற்கான மாதிரிப் பாடசாலைகளாகத் தொரிவு செய்யப்படவுள்ளன.

**மாதிரித் தெரிவு**

அட்டவணை 3.3 ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை

| குறியீடு | பாடசாலை பெயர் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | கட்டிளமைப் பருவ மாணவர்களின் எண்ணிக்கை தரம் (8-13) |
|---|---|---|---|
| **A** | மட்/ குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம். | 75 | 440 |
| **B** | மட்/ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம். | 50 | 317 |
| **C** | மட்/மயிலம்பாவெளி விக்னேஷ்வரா வித்தியாலயம். | 46 | 286 |
| **D** | மட்/தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம். | 32 | 305 |
| **E** | மட்/ ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயம். | 40 | 284 |
| **F** | மட்/ ஐயங்கேணி தமிழ் மகா வித்தியாலயம். | 28 | 156 |
| **G** | மட்/ மயிலம்பாவெளி விபுலானந்தா வித்தியாலயம். | 54 | 302 |

(மூலம் : மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம் 2017)

அட்டவணை 3.4 ஆசிரியர், மாணவர் தெரிவு


| குறியீடு | மாதிரி ஆசிரியர்கள் | மாதிரி மாணவர்கள் |
|---|---|---|
| **A** | 13 | 44 |

| | | |
|---|---|---|
| B | 10 | 32 |
| C | 09 | 28 |
| D | 06 | 30 |
| E | 08 | 28 |
| F | 05 | 15 |
| G | 11 | 30 |

மேற்குறிப்பிட்ட 07 மாதிரிப் பாடசாலைகளில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரிமூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர். ஆசிரியர்கள் 5 : 1 எனும் விகிதத்திலும் மாணவர்கள் 10 : 1 எனும் விகிதத்திலும் தெரிவு செய்யப்பட்டு தரவுகள் பெறப்படவுள்ளன. இங்கு மொத்தமாக 07 பாடசாலை அதிபர்களும், 62 ஆசிரியர்களும், 207 மாணவர்களும் இலகு எழுமாற்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும்**


ஆசிரியரால் முறையாக வழிகாட்டப்படாமையால் மாணவர்கள் சவால்களுக்கு முகம் கொடுக்கும் தன்மை




உரு 4.1 மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

82 மாணவர்கள் பருவமடைதல் பற்றிய பிழையான நிலை எனவும் 144 மாணவர்கள் இனப்பெருக்கம் சார் பிரச்சினைகள் எனவும்அ 165 மாணவர் திருமண ஒழுக்கம் எனவும் 124 மாணவர்கள் துஷ்பிரயோகம் எனவும் 18 மாணவர்கள் இளவயது திருமணம் எனும் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றமையை தெளிவாக்கியுள்ளமை பாலியற்கல்வியின் முக்கிய தேவையை வலியுறுத்துகின்றது.


**பாலியல் பிரச்சினைக்கான முக்கிய காரணங்கள்.**




உரு 4.2 பாலியல் பிரச்சினைக்கான முக்கிய காரணங்கள்.

பாடசாலை வருகின்ற மாணவர்கள் அனைவரும் கற்றலிற்கு பொருத்தமாக இருப்பதில்லை. நவீன சமூகத்தில் காணப்படுகின்ற மாற்றங்கள் மற்றும் சிக்கலான தன்மைகளால் மனிதன் அன்றாட வாழ்வில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து செல்வதைக் காணலாம். வாழ்வில் முகம் கொடுக்கும் சிக்கல்கள் தீர்வுகாணமுடியாத பிரச்சினைகட்கு கல்வியும், பயிற்சியும், பெற்ற அனுபவமுள்ள வழிகாட்டல் ஆலோசகரிடம் உதவி பெறுவது பிரச்சினைக்கு தீர்வு காண உதவும் (பெரேரா, 2007) அந்த வகையில் எதிர் கொள்ளும் பிரச்சினைகட்கான காரணமாக மேற்குறப்பிட்ட வழிகாட்டல் இன்மை என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.


**பாலியல் ரீதியாக வழிகாட்டல்களில் கூச்சமான தன்மைகள்**




உரு 4.3 பாலியல் ரீதியாக வழிகாட்டல்களில் கூச்சமான நிலைப்பாடு

42 ஆசிரியர்களும், 135 மாணவர்களும் ஏற்கிறேன் எனவும் ஓரளவு ஏற்கிறேன் என்பதனை 14 ஆசிரியர்களும், 72 மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளமையால் மாணவர்களுக்கான கூச்ச தன்மைகளும் ஆசிரியர்களின் கூச்சமான தன்மைகளும் பாலியற்கல்வி வழங்குவது தொடர்பான ஆசிரியர்கள் சார்பான பிரச்சினைகளாக நிருபிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கூச்சமும் ஆசிரியர்களுக்கான தடைகளாகக் காட்டப்படுகின்றது.


**பாலியல்சார் பிரச்சினைகளால் கல்வியில் நாட்டம் குறைவதால் கற்பித்தல் பணியில் திருப்தி அற்ற நிலை**




உரு 4.4 பாலியல்சார் பிரச்சினைகளால் கற்பித்தலில் திருப்தியற்ற நிலை

47 ஆசிரியர்களும், 167 மாணவர்களும் ஏற்கிறேன் எனவும் ஓரளவு ஏற்கிறேன் என்பதனை 15 ஆசிரியர்களும், 20 மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளமையால் மாணவர்களுக்கான பாலியல் சார் பிரச்சினைகள் உரியகால கட்டங்களில் தீர்க்கப்படாதுபோனால் அது ஏனைய கல்வி சார் நடவடிக்கைகளில் தாக்கத்தினை உண்டுபண்ணும். இது ஆசிரியர்களின் கற்பித்தல் பணிகளுக்கம் சவாலாக அமையும்.


**பாலியற்கல்விக்கான தனித்த பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.**




உரு 4.5 பாலியற் கல்விக்கான தனித்த பாடத்திட்டம்

42 ஆசிரியர்களும், 186 மாணவர்களும் 175 பெற்றோர்களும் ஏற்கிறேன் எனவும் ஓரளவு ஏற்கிறேன் என்பதனை 14 ஆசிரியர்களும், 24 மாணவர்களும் 10 பெற்றோர்களும் ஏற்றுக்கொண்டுள்ளமையால் ஏனைய பாடங்களின் அடைவுகளின் முக்கியத்துவம்போலவெ மாணவர்களுக்கான பாலியற்கல்வி தொடர்பான தனித்த பாடத்திட்டங்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது இதன் மூலம் நிறுபிக்கப்பட்டுள்ளது.

**மாணவர்களுக்கு பாலியற் கல்வியை வழங்க தயாராக இருக்கும் ஆசிரியர்கள் அரசாங்கத்தின் முறையானபாலியற் கல்விக்கான பாடத்திட்டம், கலைத்திட்டம், நியமனம் இல்லாத தன்மை தொடர்பான ஆதங்கம்**




உரு 4.6 பாலியல் சார் பாடத்திட்டம், கலைத்திட்டம் இன்மை

36 ஆசிரியர்கள் உணர்ச்சி வசப்பட்டு தாம் கற்பிப்தற்கு ஆயத்தமோ இல்லையோ முதலில் அரசாங்கம் இதற்கான கலைத்திட்டங்களை வடிவமைக்க வேண்டும் என தமது ஆதங்கத்தினை வெளியிட்டதுடன் 17 பேர் ஓரளவு ஆதங்கத்தினை வெளிப்படுத்தினர். இதன் மூலம் பாலியற்கல்வியின் முக்கியத்துவம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

**கண்டறியப்பட்டவைகளும் விதந்துரைப்புக்களும்**

**சிறப்பு நோக்கம் 01 : பாலியற் கல்வி வழிகாட்டல்கள் வழங்கப்படும் முறைகளைப்பற்றி ஆராய்தல்.**

❖ கண்டறியப்பட்டவை

சுகாதாரப் பாடத்தில் முழுமையாகக் காணப்படாமை, பாலியற் கல்விக்கு தனித்தன்மை கொண்டு வழிகாட்டப்படாமை, பாடங்களிடையே வழிகாட்டலற்ற தன்மைகள் காணப்படுகின்றமை, தனியான கலைத்திட்டங்கள் இல்லாமை, கட்டிளமைப்பருவத்தினர் பாலியல் ரீதியாக தேவைப்பாட்டை அறிந்துள்ள நிலை குறைவு.

❖ விதந்துரைப்புக்கள்

1. கலைத்திட்டத்தினுள் தனியான ஆலோசனைப் பாடமாக அமுலாக்குதல்.
2. விழிப்புணர்விலான பாடபுத்தகங்களின் அறிமுகம் செய்தல்
3. கலைத்திட்டத்தில் உள்வாங்கபடும் போது கட்டாயம் கற்பிக்க வேண்டும் என்ற மன நிலையை ஆசிரியர்களுக்கு உருவாக்குதல்.
4. ஆசிரியர் வகுப்பறைக்குள் பாடத்தை மட்டும் வழங்கிச் செல்லாமல் இருவழித்தொடர்பாடல்கள் மூலம் வழிகாட்டுவது அவசியம்.
5. கட்டிளமைப் பருவத்தினை உடைய மாணவர்களுக்கு இவ்விடயம் குறித்த ஆழமான தன்மைகளை உணர்த்துதல்

**சிறப்பு நோக்கம் 02 : பாலியற்கல்வி வழிகாட்டல்களின் முக்கியத்துவம் மற்றும் வழங்குபவர்களின் தரம், தகுதி என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக இனங்கண்டறிதல்.**

❖ கண்டறியப்பட்டவை

ஆசிரியர்களில் பாலியல் விடயங்களைக் கற்பிப்பதில் கூச்ச சுபாவம் காணப்படும் நிலை, எதிர்பாலானவர்கள் பாலியற் போதனை நடாத்துதல், பாலியற்கல்வியை வழங்குவதில் உள்ள அசமந்தப்போக்குகள், ஆசிரியர் மாணவர்களிடம் சுமூகமான உறவு நிலைகள் குறைவாகக் காணப்படல், ஆசிரியர்களுக்கு விஷேட பயிற்சிகள் இல்லாத தன்மை

❖ விதந்துரைப்புக்கள்

1. ஒரே பாலான ஆசிரியரை நியமித்தல் பாலியல் தொடர்பான வழிகாட்டலுக்கு சிறப்பானதொன்றாக அமையும்.
2. பாடத்துறைசார் ஆசிரியர்கள் அல்லாத பிறிதான ஒருவருக்கு நியமனம் வழங்குதல்
3. விஷேட பயிற்சி டிப்ளோமாக்களை பாலியல் வழிகாட்டல் தொடாபாக குறித்த ஆசிரியர்களுக்கு வலயக்கல்வி அலுவலகங்களின் மூலம் அமுலாக்கப்படுத்துவது சிறப்பானது.
4. சிறந்த வளவாளர்கள் மூலம் கருத்தரங்குகளை நடாத்துதல்.

**சிறப்பு நோக்கம் 03 : பாலியற்கல்வி தொடர்பான வழிகாட்டல்களின்போது ஆசிரியர்களுக்கு உண்டாகும் சவால்களை மதிப்பிடல்.**

❖ **கண்டறியப்பட்டவை**

வழிகாட்டல் ஆலோசகர் குறைவாக இருத்தல், கலவன் பாடசாலையாக காணப்படுவது கற்பிப்பதில் தடையை ஏற்படுத்தல், கலைத்திட்டங்கள் பாடங்களிடையே மட்டும் கற்பித்தல் காரணியாக காணப்படுகிறது, சுய கற்றலிற்கு விடுதல் காரணமாக முன்வைக்கப்பட்டது, மாணவர்களுடன் சுமுகமான உறவு நிலை இன்மை, ஆலோசனை வழங்குவதற்கு சரியான ஆளணி, பௌதீக வளங்களினைப் பெறுதல், பாடத்திட்டம் கொண்டுவரல் மூலம் சாதக நிலை அடைதல்

**விதந்துரைப்புக்கள்**

1. பாடத்திட்டம் கொண்டுவரல் மூலம் சாதக நிலை அடைதல்.
2. ஆசிரியர்களின் பாலியற் கல்வி சுமைகளைக் குறைக்க தகுதியான ஆலோசகர்களை நியமித்தல்,
3. கலவன் பாடசாலையாக காணப்படும் போது மாணவர்கள் கற்றலில் இடர்பாட்டை எதிர் கொள்கின்றனர். துனிப்பட்ட ஆளணியினரை நியமித்தல்
4. ஆலோசனை வழங்குவதற்காக முறையாக வடிவமைக்கப்பட்ட தொழிநுட்ப பாவனை அறைகளின் உதவியைக்கொண்டு சேவையை நடாத்தல்.
5. மாணவர்கள் கருத்துக்களை சரிவர உள்வாங்கிக்கொள்வா் அத்தோடு தகவல்களை இரகசியமாகப் பேணக் கூடியவாரகவும் காணப்பட வேண்டும்.
6. நேர்மனநிலை கொண்டவராக இருத்தல். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்வராக இருத்தல்

**சிறப்பு நோக்கம் 04 : முறையான பாலியல் சார் வழிகாட்டல்கள் கிடைக்காமையால் கற்றல் விருத்தியில் ஏற்படும் பாதிப்புக்களை பாடசாலைக்கும், சமுகத்திற்கும் எடுத்துக்காட்டல்.**

❖ **கண்டறியப்பட்டவை**

பாடசாலையில் கட்டிளமைப்பருவ மாணவர்கள் எதிர் கற்றலில் கவனம் செலுத்த முடியாமை இனம்காணப்பட்டது. கற்றலில் நடைமுறையில் அதிகளவு தாக்கத்தை செலுத்தும் காரணியாக பாலியல் ரீதியான பிரச்சினை இனம் காணப்பட்டது. முறையான வழிகாட்டல் இன்மை கட்டிளமைப்பருவத்தினர் எதிர் கொள்ளும் பிரச்சினையாக கொள்ளப்பட்டது. தற்கால சூழல் போக்கு என்ற நிலையும் முன்வைக்கப்பட்டது. பாடத்திட்டம் இன்மை எதிர் கொள்ளும் பிரச்சினைக்கான காரணமாக கூறப்பட்டது. தொலைத்தொடர்பின் பாவனை பிரச்சினைக்கு வழிவகுக்கிறது எனஅறியப்பட்டது. பாலியற் கல்வி என்றால் இனப்பெருக்கம் என்ற எண்ணக்கரு காணப்பட்டமை.

குடும்ப பிளவும் பிரச்சினைக்கு காரணமாக இனம்காணப்பட்டது. எதிர் கொள்ளும் நிலைகளாக சமூக விழிப்புணர்வு, துஷ்பிரயோகம் காணப்படுதல், இளவயது திருமணம் குறைவடைதல், பாலியல் ரீதியான அறிவு எற்படல், துஷ்பிரயோகம் குறைவடையும்.

**பாடசாலைக்கான ஆலோசனைகள்**

1. கட்டளமைப்பருவத்தினர் சிக்கற்பாடு நிறைந்த பருவத்தினர் இவர்களை கற்றலிற்கு சிறப்பாக வழிகாட்டல் வேண்டும் என்ற மன நிலையுடன் ஆசிரியர்கள் கற்பித்தல்.
2. பாடரீதியாக மட்டும் மாணவர்கள் மீது அக்கறைகொள்ளாமல் மாணவர்களின் உளரீதியான அக்கறையும்கொள்ள வைத்தல்.
3. மாணவர்களிடம் முழுமையான அறிவு காணப்படாமை பல இன்னல்களை எதிர் நோக்க செய்கிறது. பாலியல் ரீதியாக ஏற்படும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி விளக்குவதூடாக எதிர் கொள்ளும் பிரச்சினைகளை குறைக்க முடியும்.
4. கட்டிளமைப்பருவ மாணவர்கள் தான் தம் வாழ்க்கை தொடர்பாக முடிவெடுக்கும் நிலையில் உள்ளவர்கள் எனவே சிறந்த நடத்தை உடைய மாணவர்களாக உருவாக்க வழிசெய்யவேண்டும்.

**சமூகத்திற்க்கான ஆலோசனைகள்**

1. பாடரீதியாக மட்டும் மாணவர்கள் மீது அக்கறைகொள்ளாமல் மாணவர்களின் உளரீதியான அக்கறையும்கொள்ள வைத்தல்.
2. பாலியல் சார் சில முக்கியமான முடிவுகளை பெற்றோர்கள் வீடுகளில் விளக்குதல்
3. தற்காலத்திற்கு ஏற்றாற் போல மாணவர்களின் பாலியல் சார் கல்விக்கான ஒத்துழைப்பை வழங்குதல்
4. மாணவர்களின் தொலைத்தொடர்பு பாவனைகளில் கண்காணிப்புக்களை செலுத்தல்
5. பாலியல் சார் விடயங்களை பெற்றோர்களிடம் பிள்ளைகள் பகிரத்தக்க உறவு நிலையை தம்மிடையே வளர்த்துக்கொள்ளல்.

**சாராம்சம்**

சமூகத்தில் தற்போது அதிகரித்த பிரச்சினையாக பாலியல் சார் பிரச்சினைகளை அதிகளவில் இனம்காணக்கூடியதாக உள்ளது. பாலியல் ரீதியாக சிறு குற்றங்களில் இருந்து பாரிய குற்றங்கள் வரை தற்போது அதிகரித்து வருகின்றது. சமூகத்தில் ஏற்படும் நடைமுறைப்பிரச்சினைகள் சார்ந்தும் அதன் முலம் ஏற்படும் தீர்வுகளாக எவற்றை முன்வைக்க முடியும் என்பது குறித்தும் பாடசாலை மாணவ, ஆசிரியர்கள், அதிபர் மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவினர், ஆகியோரது கருத்துகளை பகுப்பாக்கம் செய்து ஆராயப்பட்டது. பாடசாலைகளில் வழிகாட்டல் பிரிவுகளை அமைத்தல், பாலியல் ரீதியாக வழிகாட்டல், ஆசிரியர்களை இவை சார்ந்து வலுப்படுத்தல், ஆசிரியர்களின் பாலியற் கல்வி சுமைகளைக் குறைக்க தகுதியான ஆலோசகர்களை நியமித்தல், பாடத்திட்டத்தில் முதன்மைப்படுத்தல், பாடங்களிடையே ஒழுங்காக கற்பித்தல் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இவ் ஆய்விற்கான நோக்கம் சிறப்பாக முழுமையடையும். நாம் தற்போது உடலாலும்,மனதாலும் வேதனைப்படுகின்ற இத்தகைய பிரச்சினைக்கு மேற்குறிப்பிட்ட வகைகளில் தீர்வு வழங்கும் போது நமது எதிர்கால சந்ததியினரை பாதுகாப்புடன் வழிநடத்தி செல்ல துாண்டுதலாக அமையும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

**உசாத்துணைகள்**

அரசரத்தினம், ம. (2007),“பாலியல் சார் வழிகாட்டல்கள்” சாரதா பப்ளிசர்ஸ். சென்னை, இந்தியா.

அருள்மொழி, செ. (2008),“கல்வி ஆய்வு முறைகள்”, எவகிறின் அச்சகம், மட்டக்களப்பு.

ஆனந்தராஜா, வி. 2006),“பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச்சேவை” சேமமடு பதிப்பகம்.

நவரெத்தினம்,ம. (2008) “கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கற்றல் பாங்கில் செல்வாக்குசெலுத்தும் காரணி” ஜெயராஜா வெளியீடு.

NiharikaTripathi ,T. V. Sekher ,2013 “Youth in India Ready for Sex Education? Emerging Evidence from National Surveys” 2013 Published: August 9, 2013- http://journals.plos.org/plosone/article?id=10.1371/journal.pone.0071584#s1

Cornelissen, Shirle (2012-03) “He Level of Knowledge on The Subject of Hiv/Aids among Grade 6 And Grade 7 Learners of Idas Valley Primary School In Stellenbosch” Thesis (M.phil) -- Stellenbosch University, 2012.http://scholar.sun.ac.za/handle/10019.1/20106